38

# திருக்குறள் – ஒழுக்கமுடைமை

## ஒழுக்கம் உடைமை

அஃதாவது தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஓதப்பட்ட ஒழுக்கத்தினையுடையர் ஆதல். இது மெய்ம் முதலிய அடங்கினார்க்கு அல்லது முடியாது ஆகலின், அடக்கம் உடைமையின் பின் வைக்கப்பட்டது.

**1. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப்படும்.**

ஒழுக்கம் விழுப்பம் தரலான் - ஒழுக்கம் எல்லார்க்கும் சிறப்பினைத் தருதலான், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் -அவ்வொழுக்கம் உயிரினும் பாதுகாக்கப்படும்.

உயர்ந்தார்க்கும் இழிந்தார்க்கும் ஒப்ப விழுப்பம் தருதலின், பொதுப்படக் கூறினார். சுட்டு வருவிக்கப்பட்டது. அதனால் அங்ஙனம் விழுப்பந் தருவதாயது ஒழுக்கம் என்பது பெற்றாம். உயிர் எல்லாப் பொருளினும் சிறந்தது. ஆயினும் ஒழுக்கம் போல விழுப்பந்தாராமையின் 'உயிரினும் ஓம்பப்படும் என்றார்.

**கருத்துரை**: ஒழுக்கம் சிறப்பைத் தரலால் அவ்வொழுக்கம் உயிரினும் மேலானதாகப் போற்றப்படும்.

**2. பரிந்துஓம்பிக் காக்க ஒழுக்கம்; தெரிந்துஓம்பித்**
**தேரினும் அஃதே துணை.**

ஒழுக்கம் ஓம்பிப் பரிந்து காக்க - ஒழுக்கத்தினை ஒன்றானும் அழிவுபடாமல் பேணி வருந்தியும் காக்க; தெரிந்து ஓம்பித் தேரினும் துணை அஃதே -அறங்கள் பலவற்றையும் ஆராய்ந்து அவற்றுள் இருமைக்கும் துணையாவது யாது? என்று மனத்தை ஒருக்கித் தேர்ந்தாலும், துணையாய் முடிவது அவ் ஒழுக்கமே ஆகலான்,

'பரிந்தும்' என்னும் உம்மை விகாரத்தால் தொக்கது. இவை இரண்டு பாட்டானும் ஒழுக்கத்துச் சிறப்புக் கூறப்பட்டது.

**கருத்துரை:** ஒழுக்கத்தைக் காக்கில் அவ்வொழுக்கமே துணையாக விளங்கும்.

**3. ஒழுக்கம் உடைமை குடிமை; இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்.**

ஒழுக்கம் உடைமை குடிமை - எல்லார்க்கும் தத்தம் வருணதிற்கு ஏற்ற ஒழுக்கம் உடைமை குலனுடைமையாம்; இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும் - அவ் ஒழுக்கத்தில் தவறுதல் அவ்வருணத்தில் தாழ்ந்த வருணமாய் விடும்.

பிறந்த வருணத்துள் இழிந்த குலத்தராயினும் ஒழுக்கம் உடையராக, உயர் குலத்தவராவர் ஆகலின் 'குடிமையாம்' என்றும், உயர்ந்த வருணத்துப் பிறந்தாராயினும் ஒழுக்கத்தில் தவறத் தாழ்ந்த வருணத்தாராவர் ஆகலின், இழிந்த பிறப்பாய் விடும்' என்றும் கூறினார். உள்வழிப்படும் குணத்தினும்

இல்வழிப்படும் குற்றம் பெரிது என்றவாறு, பயன் இடையீடு இன்றி எய்துதலின், அவ்விரைவு பற்றி அவ் ஏதுவாகிய வினைகளே பயனாக ஓதப்பட்டன.
**கருத்துரை**: ஒழுக்கமே உயர்ந்த குடிப்பிறப்பு. ஒழுக்கம் தவறுதல் இழிந்த குடிப்பிறப்பாய்விடும்.

**4. மறப்பினும் ஒத்துக்கொளலாகும்; பார்ப்பான்
பிறப்புஒழுக்கம் குன்றக் கெடும்.**

ஒத்து மறப்பினும் கொளலாகும் - கற்ற வேதத்தினை மறந்தானாயினும் அவ்வருணங் கெடாமையின் பின்னும் அஃது ஓதிக்கொளலாம்; பார்ப்பான் பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும் -அந்தணனது உயர்ந்த வருணம் தன் ஒழுக்கம் குன்றக்கெடும்.

மறந்த வழி இழிகுலத்தனாம் ஆகலின், மறக்கலாகாது என்னும் கருத்தான் 'மறப்பினும்' என்றார். சிறப்புடை வருணத்திற்கு மொழிந்தமையின், இஃது ஏனைய வருணங்கட்கும் கொள்ளப்படும்.
**கருத்துரை**: கற்ற மறைப் பொருளை மறந்தாலும் கற்கலாம். ஒழுக்கம் குன்றினால் மறையோதுவானுடைய குடிப்பிறப்புக்கெடும்.

**5. அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு**

அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று - அழுக்காறுடையான் மாட்டு ஆக்கமில்லாதாற் போல, ஒழுக்கம் இலான்கண் உயர்வு இல்லை -ஒழுக்கம் இல்லாதவன் மாட்டும் உயர்ச்சி இல்லை.

உவமையான் ஒழுக்கம் இல்லாதவன் சுற்றத்திற்கும் உயர்ச்சி இல்லை என்பது பெற்றாம்; என்னை?"கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்ற"மும்(குறள் 166) நல்கூர்தலின், உயர்வு -உயர்குலமாதல்.
**கருத்துரை**: பொறாமையுள்ளவனிடத்துச் செல்வமில்லாமை போல ஒழுக்கமில்லாதவனிடத்து உயர்வு இல்லை.

**6. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக்கு அறிந்து.**

ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் - செய்தற்கு அருமை நோக்கி ஒழுக்கத்தின் சுருங்கார் மனவலி உடையார், இழுக்கத்தின் ஏதம் படுபாக்கு அறிந்து - அவ்விழுக்கத்தால் தமக்கு இழிகுலம் ஆகிய குற்றம் உண்டாம் ஆற்றையறிந்து.

ஒழுக்கத்தின் சுருக்கம் அதனை உடையார் மேல் ஏற்றப்பட்டது. கொண்ட விரதம் விடாமை பற்றி 'உரவோர்' என்றார்.
**கருத்துரை**: பெரியோர் இழுக்கத்தால் இழிகுலமாதலை அறிந்து ஒழுக்கத்தில் குறையார்.

**7. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை; இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப்பழி.**

ஒழுக்கத்தின் மேன்மை எய்துவர்-எல்லாரும் ஒழுக்கத்தானே மேம்பாட்டை எய்துவர்; இழுக்கத்தின் எய்தாப் பழி எய்துவர் - அதனில் நின்று இழுக்குதலானே தாம் எய்துதற்கு உரித்தல்லாத பழியை எய்துவர்.

பகை பற்றி அடாப்பழி கூறிய வழி, அதனையும் இழுக்கம் பற்றி உலகம் அடுக்கும் என்று கொள்ளுமாகலின் 'எய்தாப் பழி எய்துவர்' என்றார். இவை ஐந்து பாட்டானும் ஒழுக்கம் உள்வழிப்படும் குணமும் இல்வழிப்படும் குற்றமும் கூறப்பட்டன.

**கருத்துரை:** ஒழுக்கத்தால் மேன்மையடைவர். ஒழுக்கத்தில் தவறுதலால் பெரும் பழியை எய்துவர்.

**8. நன்றிக்கு வித்தாகும் நல்ஒழுக்கம்; தீயொழுக்கம்**
**என்றும் இடும்பை தரும்.**

நல்ஒழுக்கம் நன்றிக்கு வித்தாகும் - ஒருவனுக்கு நல்ஒழுக்கம் அறத்திற்குக் காரணமாய் இருமையினும் இன்பம் பயக்கும்,தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும் -தீயஒழுக்கம் பாவத்திற்கு காரணமாய் இருமையினும் துன்பம் பயக்கும்.

'நன்றிக்கு வித்தாகும்' என்றதனால் தீயொழுக்கம் பாவத்திற்குக் காரணமாதலும் 'இடும்பை தரும்' என்றதனால் நல்லொழுக்கம் இன்பம் தருதலும் பெற்றாம்; ஒன்று நின்றே ஏனையதை முடிக்கும் ஆகலின்,இதனான் பின்விளைவு கூறப்பட்டது.

**கருத்துரை:** நல்லொழுக்கம் அறத்திற்குக் காரணமாகும். தீயஒழுக்கம் என்றும் துன்பத்தைத் தரும்.

**9. ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய**
**வழுக்கியும் வாயால் சொலல்**

வழுக்கியும் தீய வாயால் சொலல் - மறந்தும் தீய சொற்களைத் தம் வாயால் சொல்லும் தொழில்கள், ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லா -ஒழுக்கம் உடையவர்க்கு முடியா.

தீய சொற்களாவன: பிறர்க்குத் தீங்கு பயக்கும் பொய்ம் முதலியனவும், வருணத்திற்குரிய அல்லனவும் ஆம். அவற்றது பன்மையால், சொல்லுதல் தொழில் பலவாயின. 'சொலல்'சாதியொருமை. "சொலல்' எனவே அமைந்திருக்க 'வாயால்' என வேண்டாது கூறினார். 'நல்ல சொற்கள் பயின்றது'எனத் தாம் வேண்டியதன் சிறப்பு முடித்தற்கு. இதனை வடநூலார் 'தாற்பரியம்'என்ப.

**கருத்துரை**: நல்லொழுக்கமுடையோர் தீய சொற்களைச் சொல்லார்.

**10. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார்.**

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லார் - உலகத்தோடு பொருந்த ஒழுகுதலைக் கல்லாதார்,பல கற்றும் அறிவிலாதார்- பல நூல்களையும் கற்றாராயினும் அறிவிலாதார்.

உலகத்தோடு பொருந்த ஒழுகுதலாவது: உயர்ந்தோர் பலரும் ஒழுகிய ஆற்றான் ஒழுகுதல். அறநூல் சொல்லியவற்றுள் இக்காலத்திற்கு ஏலாதன ஒழிந்து,சொல்லாதனவற்றுள் ஏற்பன கொண்டு வருதலான், அவையும் அடங்க, 'உலகத்தோடு ஒட்ட' என்றும், கல்விக்குப் பயன் அறிவும், அறிவிற்குப் பயன் ஒழுக்கமும் ஆகலின், அவ்வொழுகுதலைக் கல்லாதார், 'பல கற்றும் அறிவிலாதார்' என்றும் கூறினார்.

ஒழுகுதலைக் கற்றலாவது அடிப்படுதல். இவை இரண்டு பாட்டானும், சொல்லானும், செயலானும் வரும் ஒழுக்கங்கள் எல்லாம் ஒருவாற்றான் தொகுத்துக் கூறப்பட்டன.

**கருத்துரை:** உலகத்தவரோடு பொருந்த ஒழுகுதலைக் கல்லாதவர் பல கற்றும் கல்லாதவரே.